பக்கங்கள்: எட்டு

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆவணி 25 புதன்கிழமை (10-9-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 273

# சீனச் சரக்குக் கப்பல் மீது நேற்று புல்மோட்டைக்கு அருகே தாக்குதல்!

## மாலுமிகள் 4 பேர் பலி; 4 பேரைக் காணவில்லை 5 சிவிலியன்களும், 2 படையினரும் மரணம்

கொழும்பு, செப்ரெம்பர் 10

புல்மோட்டைக் கடற் பகுதியில் நங்கூரமிட்டிருந்த - 34 ஆயிரம் தொன் எடையுள்ள - சீனாவைச் சேர்ந்த - "எம். வி. கோடியாற்றி" - என்ற சரக்குக் கப்பல் மீது நேற்று அதிகாலை 1.30 மணியளவில் பெரும் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலில் அக்கப்பலில் பணியாற்றிய சீன மாலுமிகள் நால்வர் உயிரிழந்தனர்; மற்றும் நான்கு மாலுமிகள் காணாமல் போயினர்; 22 மாலுமிகள் காயமடைந்தனர். அச்சமயம் கப்பலில் பணிபுரிந்து கொண்டிருந்த உள்ளூர் சிவிலியன்களில் ஐவரும், கப்பலுக்குப் பாதுகாப்பு வழங்கிய படையினரில் இருவரும் அங்கு நிகழ்ந்த மோதல்களில் உயிரிழந்தனர்; மூன்று படையினரும் ஐந்து சிவிலியன்களும் காயமடைந்தனர்.

சீனாவின் 'ஓஷன் சிப்பிங் கம்பனி'க்கு சொந்தமான இக் கப்பல் புல்மோட்டைப் பகுதியில் இல்மனைட் ஏற்றிக் கொண்டு நியூயோர்க் செல்லவிருந்த சமயமே நேற்று அதிகாலை தாக்குதலுக்கு இலக்கானது.

கண்ணாடி இழைப் படகுகளில் வந்த புலிகளே இத் தாக்குதலை நடத்தியதாக கொழும்பு செய்தி வட்டாரங்களிலும் அரசுத் தரப்புச் செய்திகளும் தெரிவித்தன.

கப்பல் தாக்கப்பட்ட சமயம் அதில் சீனநாட்டு மாலுமிகள் 32 பேரும், தொழிலாளர்கள் உட்பட அறுபது உள்ளூர் சிவிலியன்களும் இருந்ததாகக் கூறப்படுகின்றது.

கப்பல் மீது புலிகள் றொக்கட் குண்டுகளையும், கைக் குண்டுகளையும் ஏவித் தாக்கிய போது கப்பலின் என்ஜின் தீப்பற்றிக் கொண்டது என பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் குறிப்பிட்டது.

கடற்படையின் பீரங்கிப் படகுகள் உடனடியாக அந்த இடத்துக்கு விரைந்து தாக்குதல் நடத்தின என்றும் –

இத்தாக்குதலின் போது புலிகளின் 4 படகுகள் அழிக்கப்பட்டதுடன் 25 கடற்புலிகளும் கொல்லப்பட்டனர் என்றும் —

மேலும் மூன்று படகுகள் மிக மோசமாகச் சேதமடைந்தன என்றும் —

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மௌனம்

சீன நாட்டு சரக்குக் கப்பல் புல்மோட்டை அருகே தாக்கப்பட்டது குறித்து தமது தரப்பு தகவல் எதையும் 'புலிகளின் குரல்' நேற்றிரவு விடுக்கவில்லை.

ஸ்ரீலங்கா அரசுத் தரப்பில் இது தொடர்பாக வெளியிடப்பட்ட தகவல்களையே "புலிகளின் குரல்" அந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஒலிபரப்பியது.

இதற்கிடையில் —

சரக்குப் போக்குவரத்து என்ற போர்வையில் வெளிநாடுகளில் இருந்து இலங்கை இராணுவத்துக்கு ஆயுதங்கள் கொண்டுவந்து இறக்கிய கப்பலே அது என்று விடுதலைப் புலிகள் கூறியதாக 'வெரித்தாஸ்' வானொலி நேற்றிரவு குறிப்பிட்டது. (உ-3-164)

## மாங்குளம் நோக்கி கடும் ஷெல் தாக்கு!

வவுனியா, செப். 10

மாங்குளம் பகுதியை நோக்கி நேற்றுக் காலை கடும் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலில் படுகாயமுற்ற 14 வயதுடைய இளம் பெண் ஒருவர் கால் ஒன்றை இழந்த நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

அதே நேரம் — முல்லைத்தீவு காரைப்பற்றுப் பகுதியை நோக்கியும் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

சேதவிவரங்கள் தெரியவரவில்லை.

(உ-164-3)

## மட்டக்களப்பில் புலிகள் மோட்டார் ஷெல் தாக்கு!

### 2 படையினர் பலி! மூவர் காயம்!!

மட்டக்களப்பு, செப். 10

மட்டக்களப்பு — வாழைச்சேனை வீதியில் துறைமுகப் பகுதி இராணுவ காவலரண் மீது நேற்று மாலை 6.30 மணியளவில் விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் இரு படையினர் உயிரிழந்தனர்; 3 படையினர் காயமடைந்தனர்.

அப்பகுதியில் படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற ஷெல் தாக்குதல்களில் சிக்கி 72 வயது மூதாட்டி ஒருவர் உயிரிழந்தார்; 6 பொது மக்கள் காயமடைந்து வாழைச்சேனை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வாழைச்சேனைப் பகுதியில் பல வீடுகள் சேமடைந்தன.

(இ-21-3)

## குடாநாட்டுக்கு மேலும் 40 பஸ்கள் கிடைக்கும்

### ஜனாதிபதி பணிப்புரை

யாழ்ப்பாணம், செப். 10

யாழ். குடாநாட்டில் போக்குவரத்துச் சேவையை சீராக்க உடனடியாக மேலும் 40 பஸ்களை வழங்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

அண்மையில் கொழும்பில் நடந்த உயர்மட்ட மாநாடு ஒன்றில் வைத்தே இந்தப் பணிப்புரையை ஜனாதிபதி விடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய உடனடி நடவடிக்கைகள் குறித்து இந்த மாநாட்டில் ஆராயப்பட்டதாக யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் தெரிவித்தார்.

(உ-...)

## 98 ஆசிரியர்கள் புதிதாக நியமனம்

யாழ். மாவட்டத்துக்கு புதிதாக 98 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று வவுனியா கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன-

கடந்த காலங்களில் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைகளில் இருந்தே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

நியமனம் பெற்றவர்களின் விவரம் வவுனியா கல்வித் திணைக்களத்தில்பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

## திருமலையில் இரு மின்மாற்றிகள் தகர்ப்பு!

திருகோணமலை, செப்.10

திருகோணமலை மாவட்டம் பேரியகுளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8-30 மணியளவில் இரண்டு டிரான்ஸ் போமர்கள் (மின் மாற்றிகள்) இனந்தெரியாதோரால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன.

இதனால் 16 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் —

350 குடும்பங்களுக்கான மின் இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் —

தெரிவிக்கப்பட்டது.

(உ-21-3)

## புளியங்குளத்தில் 2 புலிகள் களப்பலி!

வவுனியா, செப். 10

புளியங்குளம் பகுதியில் படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடந்த இரு தினங்கள் இடம்பெற்ற மோதலில் 2 போராளிகள் களப்பலியானதாக "புலிகளின் குரல்" தெரிவித்தது.

நேற்று முன்தினம் ஒருவரும், நேற்று ஒருவருமாக இருவர் களப்பலியானதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-164-3)

## கல்யாணபுர தாக்குதலில் 10 புலிகள் களப்பலி!

### 'பவள்' கவச வாகனம் அழிப்பு

வவுனியா, செப். 10

மணலாறில் உள்ள கல்யாணபுர இராணுவமுகாம் மீது நேற்று முன்தினம் தாங்கள் மேற்கொண்ட தாக்குதலை அடுத்து அந்த முகாமைத் தாங்கள் பூரண கட்டுப்பாட்டில் வைத்திருந்தாகவும் —

ஒரு பவள் கவச வாகனத்தை அழித்ததாகவும் —

பெருந்தொகையான ஆயுதங்களைக் கைப்பற்றியதாகவும் —

"புலிகளின் குரல்" வானொலி நேற்றிரவு அறிவித்தது.

முகாம் தாக்கப்படும்போது உதவிக்கு வந்த படையினர் மீதும் தாக்குதல் நடத்தியதாகவும் —

முகாம் தாக்குதல் சம்பவத்தில் தமது தரப்பில் 10 போராளிகள் களப்பலியானார்கள் என்றும்

'புலிகளின் குரல்' மேலும் தெரிவித்தது. (உ-3-164)

## புலிகளின் ஏழு சடலங்கள் மடுவில் வைத்து ஒப்படைப்பு

வவுனியா, செப். 10

மணலாறு கல்யாணபுர முகாம்தாக்குதலில்உயிரிழந்த ஏழு புலிகளின் சடலங்கள் மடுவில் வைத்து நேற்று விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

இச்சடலங்களை எடுத்து வருவதற்காக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் வடக்கு - கிழக்கு இணைப்பாளர் சிவநாதன் கிஷோர் நேற்றுக்காலை மணலாறுக்குச் சென்றார்.

கல்யாணபுர முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்ட அவரிடம் விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த 3 பெண்களினதும், 4 ஆண்களினதும் சடலங்கள் படையினரால் ஒப்படைக்கப்பட்டன.

அவற்றை எடுத்து வந்த அவர் மடுவில் வைத்து விடுதலைப்புலிகளிடம் அவற்றை ஒப்படைத்த பின்னர் வவுனியா திருப்பினார்.

(உ-164 -3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## NEW SCIENCE COLLEGE
குருநாதர் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

**PHYSICS**

திரு. சம்பந்தன் B. Sc
98 A/L துரித மீட்டல் வினாவிடை வகுப்பு
[அலகு ரீதியானது]

**ஆரம்பம்:- 11-09-97**
Tue. Thu. ]- 2.30 மணி

**வெப்பவியல்**
திங்கள், புதன் — 4.00 – 5.00 மணி

**99 A/L**
**பொறியியல்**
செவ், வியா. — 3.30 – 4.30 மணி

**அலைவுகளும் அதிர்வுகளும்**
சனி, ஞாயிறு — 4.00 – 5.00 மணி
(49573)



## A/L 97
புள்ளியிடத்திட்ட வகுப்பு [SCHEME]
பொருளியல்
BY: Mr. சண்

புதிய பாடத்திட்டம் 11-9-97 (8.00 மணி)
பழைய பாடத்திட்டம் 11-9-97 (9.30 மணி)

**N·C·C·A**
யாழ்ப்பாணம்.

குறிப்பு: 1997இல் பரீட்சை எடுத்த சகல மாணவரும் இலவசமாக அனுமதிக்கப்படுவர், (49422)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில்: 19-12-1955 விண்ணில்: 11-08-1997
**திதி: 10-09-1997**

### அமரர் சின்னத்தம்பி செல்வராசா

ஆத்மா அமைதி அடைய ஆண்டவனை பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
சின்னத்தம்பி முத்துப்பிள்ளையும், பிள்ளைகளும்.

பாரதி வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
(49578)


## எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புகள்

**ஆரம்பம்: 13-9-97** (2 மணி)
ஆசிரியர் அ. குமாரவேல்

**புதிய உயர்கல்லூரி,**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்,
கிளை நிறுவனமாகிய
பிறைற்வே இன்ஸ்ரிரியூட்
மூத்தவிநாயகர் கோயிலடி, ஆனைக்கோட்டை.

**ஆரம்பம்: 12-9-97** (3 மணி)
(47423) - நிர்வாகி


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

நல்லூர்
மங்கையர்க்கரசி வித்தியாலயம்
(யா/நல்லூர் இ. த. பெ. பா)

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில்
தேர்வு — 1995

சித்தியடைந்தோர் விவரம்:

| | பெயர் | புள்ளி |
|---|---|---|
| செல்வன் | K. மயூரன் | 131 |
| ,, | P. பார்த்தீபன் | 110 |

இப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் இம் மாணவர்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்தி வரவேற்கின்றோம்.

(49572) **பழைய மாணவர் சங்கம்**

## குப்பைக்குள் ஷெல்

யாழ்ப்பாணம், செப். 10
குப்பையைக் கொளுத்திய வேளை அதிலிருந்து வெடித்த ஷெல்லினால் ஒருவர் படுகாயமடைந்தார்.

நீர்வேலி வடக்கில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் வி. சரவணமுத்து (வயது 57) என்பவரே படுகாயமடைந்தவராவார். (அ-15)


## தெஸ்பியன் கல்வி நிலையம்
K K S. வீதி, இணுவில்.

**Spoken English**
by:
**BRITTO**

ஆரம்பம்: 11 - 09 - 1997
வியாழன் 2-00 p.m.

**A/L 1997**
**கலை - வர்த்தக**
பகல் நேர வகுப்புக்கள்
13 - 09 - 1997
சனிக்கிழமை
ஆரம்பமாகின்றது.
- நிர்வாகி
(49576)



## New Science Academy
Jaffna

**98 A/L**
விலங்கியல்
பிறப்புரிமையியல்
திரு. கெங்காதரன்

ஆரம்பம்:- 11 - 09 - 97
Tue, Thu 3-30 — 4-30
(49575)



## யூனிவேர்சல்
கந்தர்மடம்.

**99 A/L**
**Physics**
அலைவுகளும்
அதிர்வுகளும்

திரு. ஜெயசீலன்
B. Sc. (Special)

ஆரம்பம்:- 11 - 09 - 97
Tue. - Thu 7 00 a.m.
(49574)



**Spoken English**
by:
**BRITTO**

ஆரம்பம்;- 13 - 09 - 97
2 மணி.

**N. C. C. A.**
வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.
(47421)



எமது புதிய
வெளியீடு
விஜே நடித்த
★ நேருக்குநேர்
ராம்கி நடித்த
★ கல்யாண
வைபோகம்

**வீடியோ விமல்**
யாழ்ப்பாணம்.
(49552)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசம்மா சின்னத்துரை

சுன்னாகம், முத்துக்கிருஸ்ணர் வீதியைச் சேர்ந்த திருமதி சி. இராசம்மா 9-09-97 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. சி. சின்னத்துரையின் அன்பு மனைவியும், திரு. சி. மகாலிங்கம் (முன்னாள் இ. போ. ச. உத்தியோகஸ்தர்), திருமதி இராஜேஸ்வரி, திருமதி ஈஸ்வரி, திருமதி அன்னரத்தினம், திருமதி தெய்வநாயகி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற திருமதி மங்கையர்க்கரசி (கூ. பரிசோதகர்) மற்றும் திரு. சி. நடராசா (முனீஸ்வரா கபே, சுன்னாகம்), திரு. ஆ. இரத்தினம் (வலி. தெற்கு பிரதேசசபை, உப அலுவலகம், உடுவில்), திரு. நா. முருகையா (வர்த்தக முகாமையாளர், பல. நோ. கூ. சங்கம் சுன்னாகம்), காலஞ்சென்ற திரு. க. சண்முகலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 9-09-97 இல் சுன்னாகத்தில் நடைபெற்றன.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. மகாலிங்கம்
(மகன்)
(47420)

## வ. மகாலிங்கம்

கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும், சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வ. மகாலிங்கம் (மாவை கொல்லங்கலட்டி வீரகத்திவிநாயகர் தேவஸ்தான ஆதீனகர்த்தாவும், கொல்லங்கலட்டி சை. த. க. பாடசாலை முன்னைநாள் அதிபரும், முன்னைநாள் இலங்கை அரசினர் தமிழ் ஆசிரியர் சங்கச் செயலாளரும்) 9-9-97 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற இராசலட்சுமியின் அன்புக் கணவரும், திருமதி சிவை குகநேசன் (ஆசிரியை, வயாவிளான் ம. ம. வி.), வாமை ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், N. K. குகநேசன் (ஆசிரியர், ஊரெழு கணேசா வித்.) அவர்களின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற திருமதி பராசக்தி தியாகராசா, Dr. கணேசலிங்கம் (மார்க்கா நிறுவனம்), காலஞ்சென்ற ஸ்ரீலசிறி, வ. குமாரசாமிக்குருக்கள் (மாவை கொல்லங்கலட்டி வீரகத்திவிநாயகர் தேவஸ்தான ஆதீனகர்தா), திருமதி வீனாவாத 'விபூசனி ஆகியோரின் அன்புச்சகோதரரும், திருமதி புவனேஸ்வரி, கனகசபாபதி, காலஞ்சென்ற தியாகராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், திருமதி கார்த்தியாயினி (அமெரிக்கா), திருமதி குகப்பிரியை யோகேந்திரா (கொழும்பு), உமாமகேஸ்வரன் (கணக்காளர், லண்டன்), சந்திரமோகன் (பொறியியலாளர், லண்டன்), மதன்மோகன் (நூலகர், கொழும்பு) ஆகியோரின் குஞ்சியப்புவும் காலஞ்சென்ற திருமதி சர்வேஸ்வரி, உருத்திரகோடிஸ்வரக்குருக்கள், திருமதி ஜெகத்ஜெனனி, வைத்தீஸ்வரன், ஜெகதீஸ்வரர், பிரபாகரன், திருமதி மைத்திரேயி, செல்வி அங்கையற்கண்ணி (ஆசிரியர், கொடிகாமம் அ. த. க பாடசாலை), சந்திரமௌலீசன் (ஆசிரியர், கச்சாய் அ. த. க பாடசாலை), சந்திரசேகரன் (பொறியியலாளர், சிங்கப்பூர்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

இவரின் பூதவுடல் உரும்பிராய் கிழக்கு அரச வீதியிலுள்ள இல்லத்தில் இருந்து இன்று (10 - 09 - 97) புதன்கிழமை காலை 10 மணிக்கு தகனக்கிரியைகளிற்காக உரும்பிராய் இளங்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மருமகன்
N. K. குகநேசன்
(ஆசிரியர்)

அரச வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.
(49579)

## சின்னத்தம்பி குணரட்ணம்

(சாமுவேல் அன் சன்ஸ், கொழும்பு, முன்னாள் லிகிதர்)

உடுப்பிட்டியைச் சேர்ந்த திரு. சின்னத்தம்பி குணரட்ணம் அவர்கள் 8 - 9 – 97 இல் காலமாகிவிட்டார்.

இவர் பூரணம் அவர்களின் அன்புச் கணவரும், திருமதி ஜெ. ஜெகதீஸ்வரி (ஜேர்மனி), திருமதி ப. பூரணகுணரேவதி, கு. குகதாசன் (கனடா), கு. மகேந்திரதாஸ் (கனடா), செல்வி கு. சறோஜினிதேவி (சென்தோமஸ் கொன் வென்ட்ற், மாத்தளை), திருமதி பா. சகுந்தலாதேவி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும். க. ஜெகதீஸ்வரன் (ஜேர்மனி), பொ. பத்மநாதன் (நல்லூர், ப. நோ. கூ. சங்கம்), திருமதி கு. றாஜினி (கனடா), திருமதி ம. றஜனி (கனடா), மு. பாஸ்கரநாதன் (பொறியியலாளர், கனடா), ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற சி. அழகரத்தினம், காலஞ்சென்ற எ. தங்கரத்தினம், காலஞ்சென்ற வை. றோசம்மா, திருமதி த. ஞானரத்தினம், திருமதி வே. சற்குணபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. பத்மநாதன்.
(மருமகன்)

குணபூரண வாசா
உடுப்பிட்டி.
(49570)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதைப்படகு கவிழ்ந்துஹெய்ட்டியில் 300 க்கும் மேற்பட்டோர் மரணம்!

போர்ட் ஒப் பிரின்ஸ், செப். 10

ஹெய்ட்டியில் நேற்று முன்தினம் பயணிகள் பாதைப் படகு (Ferry) கவிழ்ந்ததில் சுமார் 300 - க்கு மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர்.

சிறிய தீவான லக்னாவில் இருந்து மொன்றோயிஸ் பகுதிக்குச் சென்று கொண்டிருந்த பாதைப் படகே விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் 300 - க்கு மேற்பட்டவர்கள் இறந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், நேற்று வரை 50 பேரின் சடலங்களே மீட்கப்பட்டன.

மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள ஐ. நா. மீட்புப்படையினர் மூழ்கிய படகுக்குள் 40 சடலங்கள் இருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

அதே நேரம் — படகு கவிழும் போது, படகின் மேல் தட்டில் இருந்த 60 பேர் நீரில் குதித்துத் தப்பியுள்ளனர்.

உதைபந்தாட்டப் போட்டி ஒன்றுக்குச் சென்ற வீரர்களும், போட்டியை ரசிக்கச் சென்ற ரசிகர்களுமே இறந்தவர்களில் பெரும்பாலானவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

படகில் கூடுதலாக பயணிகளை ஏற்றியதாலேயே விபத்து ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. (இ-3)

## பனிப்படலத்தில் மறைந்த மலை!

சீனாவிலுள்ள சின்ஜியாங் நகர்ப்பகுதியில் புதியமலை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

8 ஆயிரத்து 11மீற்றர் உயரமுள்ள இந்த மலைக்கு 'ஜோங்யாங்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

உலகிலேயே 15 ஆவது உயரமான மலை இதுவென்று மலையேறும் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

இத்தனை நாள்களாக அந்தமலை பனிப்படலத்துக்குள் இருந்ததால் வெளியே தெரியவில்லை என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மலையேறும் வீரர்களுக்கு இந்தமலை புதிய சவாலாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

# தெரெஸாவுக்கு அஞ்சலி செலுத்த கல்கத்தாவில் கூடும் மக்கள்

கல்கத்தா, செப். 10

மறைந்த அன்னை தெரெஸாவுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக இந்தியாவின் பல்வேறு நகரங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் கல்கத்தாவில் குழுமியவண்ணம் இருக்கின்றார்கள்,

அன்னை தெரெஸாவுக்கு அரச மரியாதைகளுடன் மரணச்சடங்குகள் நடத்துவது தொடர்பான விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனின் துணைவியார் ஹிலாரி கிளின்ரன் தலைமையிலான அமெரிக்க தூதுக்குழு ஒன்று கல்கத்தாவில் சனியன்று நடைபெறும் இறுதிச்சடங்கு ஆராதனையில் கலந்து கொள்ளும் என்று வெள்ளை மாளிகை அறிவித்தது.

அயர்லாந்தில் உள்ள றோமன் கத்தோலிக்க திருச்சபைத் தலைவரான அதிமேற்றிராணியார் ஜோன் பெடியும் இறுதிச்சடங்கில் பங்குபற்றுவார்.

அன்னை தெரெஸாவின் பூதவுடல் நாளை தேசியக் கொடியால் சுற்றப்படும். அதன்பின்னர் இராணுவத்தினர் பூதவுடலுக்குப் பாதுகாப்பு வழங்குவர்.

இந்தியாவில் வழமையாக அரச தலைவர்களுக்கு மட்டுமே அரசமரியாதையுடன் மரணச் சடங்கு நடத்தப்படுகிறது.

ஆயினும் அன்னை தெரெஸாவுக்கு இத்தகைய மரியாதையை வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாக இந்தியா அறிவித்துள்ளது.

சனியன்று பூதவுடல் சென். தோமஸ் தேவாலயத்தில் இருந்து பீரங்கி வண்டிகள் சகிதம் இராணுவ அணி வகுப்புடன் மூன்று கிலோமீற்றர் தொலைவில் உள்ள நேதாஜி உள்ளக விளையாட்டரங்குக்கு எடுத்துச் செல்லப்படும். (இ-3)

# இல. உதைபந்தாட்ட குழு மீது நேபாளத்தில் கல்வீச்சு!

காட்மண்டு, செப் 10

நேபாளத்தின் தலைநகர் காட்மண்டுவில் தற்பொழுது நடைபெற்று வரும் சார்க் நாடுகளுக்கிடையிலான உதைப்பந்தாட்டப் போட்டியில் கலந்து கொண்டுள்ள இலங்கை உதைப்பந்தாட்ட அணி கல்வீச்சுக்கு உள்ளாகியது.

இப் போட்டியில் இலங்கையும், நேபாளமும் மோதியதில் இலங்கை அணி 3 - 1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தோல்வியடைந்த நேபாள அணியின் ஆதரவாளர்களே இலங்கை அணி வீரர்கள் மீது கல்வீச்சு நடத்தியதாகக கூறப்படுகிறது

கூடுதலான பொலீஸார் மைதானத்துக்கு அழைக்கப்பட்ட போதும், கல்லெறிந்த எவரும் கைதாகவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த சம்பவத்தில் இலங்கை வீரர் ஒருவருக்கு காதில் காயம் ஏற்பட்டு இவர் உடனடியாக அவசர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார். (இ-3)

# தமிழ்மொழி வாரம் குறித்து சிங்கப்பூரில் தாக்கலானவழக்கு

## சமரசத்துக்கு தொழிற்கட்சி இணக்கம்

சிங்கப்பூர், செப். 10

சிங்கப்பூரில் இந்திய இன அரசியல்வாதிகள் ஐவர் தாக்கல் செய்த அவதூறு வழக்கு ஒன்றில் ஒருலட்சத்து 30 ஆயிரம் அமெரிக்க டொலருக்கும் கூடிய அளவு பணத்தை வழங்குவதற்கு எதிர்க்கட்சியான தொழிற்கட்சி இணங்கியுள்ளது.

இந்த ஐவரில் சிங்கப்பூர் வெளியுறவுத்துறை அமைச்சர் சண்முகம் ஜெயக்குமாரும் அடங்குவார்.

தமது அரசியல் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக மேற்கண்ட ஐவரும் சிங்கப்பூரில் தமிழ்மொழி வாரத்தைப் பயன்படுத்தினார்கள் எனக் குற்றஞ்சாட்டி 1996 இல் ''ஹமர்'' என்ற தொழிற்கட்சி செய்தித் தாளில் கட்டுரை வெளியாகி இருந்தது.

இதுதொடர்பாக இழப்பீடு கோரியே இந்த ஐவரும் வழக்குத் தொடுத்திருந்தனர்.

தொழிற்கட்சி மன்னிப்புக் கோரி உள்ளதுடன் மேற்கண்ட தொகையை வழங்கி பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளவும் முன் வந்துள்ளது. (இ-3)

# டயானாவின் மரணச் சடங்குகள் குறித்து சார்ள்ஸ், மகாராணி கருத்து வேறுபாடு!

## பக்கிங்ஹாம் அரண்மனை வட்டாரங்கள் மறுப்பு

லண்டன், செப் 10

வேல்ஸ் இளவரசி டயானாவுக்கான இறுதிச் சடங்கு ஏற்பாடுகள் தொடர்பாக எலிஸபெத் மகாராணியாரின் ஆலோசகர்களுக்கும் இளவரசர் சார்ள்ஸுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் காணப்பட்டதாகக் கூறும் ரெலிவிஷன் செய்தி ஒன்றை பக்கிங்ஹாம் அரண்மனை வட்டாரங்கள் மறுத்துள்ளன.

டயானாவிற்கு தனிப்பட்ட முறையிலான இறுதிச் சடங்கு நிகழ்ச்சி ஒன்றுதான் நடத்தப்பட வேண்டும் என எலிஸபெத் மகாராணியார் தொடக்கத்தில் இருந்து விடாமல் வலியுறுத்தி வந்ததாகப் பிரிட்டனில் சானல்சோ தொலைக்காட்சி செய்தி ஒன்றை வெளியிட்டிருந்தது.

வேல்ஸ் இளவரசி டயானா பரிதாபகரமான முறையில் கார்விபத்து ஒன்றில் இறந்து போய் விட்ட பின்னர் குடும்பத்தினர் மரபு ஒழுங்கு முறை விதிகளை மிக அதிகமாகப் பின்பற்றியதாகவும் - தேசிய அளவில் வெளிப்பட்ட பெரும் துயரத்தையும் துக்கத்தையும் அவர்கள் பிரதிபலிக்கவே இல்லை என்றும் தெரிவித்து பொதுமக்களிடமிருந்துகண்டனக் குரல்களும் குறைகூறல்களும் வெளியான கையுடனேயே இந்த ரெலிவிஷன் செய்தி ஒளிபரப்பப்பட்டது.

ஆயினும் பக்கிங்ஹாம்அரண்மனை வட்டாரத்தினர் இந்த தொலைக்காட்சிச் செய்தி உண்மையல்ல என்று குறிப்பிட்டதோடு வெறும் அனுமானங்கள் தான் அவை என்றும் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே வேல்ஸ் இளவரசியின் இறுதிச் சடங்குகள் தொடர்பான செய்திகளைச் சிறப்பாக வெளியிட்டதன் மூலம் வசூலான இலாபங்கள் அனைத்தையுமே பி. பி. சி இப்போது டயானா நினைவு நிதியத்துக்கு நன்கொடையாக வழங்குகின்றது. (இ-9)

உலக அரங்கில்

## தாய்வான் அனுமதி

திபெத்திய ஆன்மிகத் தலைவர் தலாய்லாமாவின் கிளை ஒன்று தாய்வானில் இயங்குவதற்கு தாய்வான் அரசு அனுமதி வழங்கி உள்ளது. (இ)

மாநிலங்களின் அவையில் உள்ள

# தமிழ் மாநில காங்கிரஸ் உறுப்பினர் பதவிகளை இராஜினாமா செய்யலாம்!

புதுடில்லி, செப். 10

இந்திய நாடாளுமன்றத்தின் மாநிலங்களின் அவையைச் சேர்ந்த தமிழ் மாநில காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலர் தம்முடைய பதவிகளை ராஜினாமாச் செய்யக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ் மாநிலக் காங்கிரஸ் தல்லவர் ஜி. கே.மூப்பனார், மத்திய அமைச்சர் ஜெயந்தி நடராஜன் மற்றும் பீற்றர் அல்போன்ஸ் ஆகியோர் நாடாளுமன்றத்தின் மேலவையான மாநிலங்களின் அவை உறுப்பினர்களாக இருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சிவசேனா நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அவர்கள் மீது கட்சித் தகவல் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று மனுச் செய்துள்ளார்.

இதன் காரணமாக இவர்கள் தமது மாநிலங்கள் அவை உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்யக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவர்கள் மூவரும் மாநிலங்கள் அவையில் காங்கிரஸ்(ஐ) சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.

கடந்த பொதுத்தேர்தலில் காங்கிரஸ்(ஐ) மாநில காங்கிரஸின் விருப்பத்திற்கு எதிராக அ.தி.மு.கவுடன் கூட்டுச் சேர்ந்ததால் தேர்தலுக்கு சில தினங்களுக்கு முன்பாக மூப்பனார் தலைமையில் பெரும்பாலானவர்கள் காங்கிரஸில் இருந்து விலகி தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியை உருவாக்கினார். (இ-3)

## நாகாலாந்தில் 127 வருடகால மரம்

புதுடில்லி, செப். 10

நாகாலாந்தைச் சேர்ந்த மெகொம்ஸியன் மாவட்டத்தில் உள்ள மலங்கிகேன் என்ற கிராமத்தில் மிகவும் பழைமையான மரம் ஒன்று இப்போதும் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

127 ஆண்டுகள் பழைமையான இந்த மரத்தை அமெரிக்காவை சேர்ந்த கிறிஸ்தவ தொண்டு நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்த கிளார்க் என்பவர் நட்டதாகக் கூறப்படுகின்றது.

ஒரு நூற்றாண்டைத் தாண்டி விட்ட இந்தமரம் இன்னும் பசுமையாக இருப்பதோடு மட்டுமல்லாமல் சுவையான பழங்களையும் கிராம மக்களுக்கு தந்து கொண்டிருக்கின்றதாம். (இ-5)

## எய்ட்ஸுக்கு மாற்று உடலுறுப்பு

உலகில் பெரும் பீதியை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சான். பிரான்ஸிஸ்கோ நகரில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகம் மாற்று உடலுறுப்புக்களை வழங்குகின்றது.

ஆனால் நோய்க்கிருமிகள் கட்டுப்பாட்டில் உள்ளவர்களுக்கும், மற்ற வியாதிகளால் உயிரிழக்கும் அபாயம் இல்லாதவர்களுக்கும் மட்டுமே மாற்று உடலுறுப்புக்கள் வழங்கப்படுகின்றன.

வேறு வழியேயில்லை என்ற நோயாளிகள் மட்டுமே இந்தச் சலுகையைப்பெற [illegible] றது. (இ-5)

# ரஷ்யா நிலத்துக்கு அடியில் ரகசிய அணு ஆயுத சோதனை

## கிளின்ரன் நிர்வாகம் சந்தேகம்

வாஷிங்டன், செப். 10

அணு ஆயுதச் சோதனைத் தடையை மீறவில்லை என்று ரஷ்யா கூறினாலும் சில நாள்களுக்கு முன்பு ரஷ்யா பூமிக்கடியில் அணு ஆயுதச் சோதனை ஒன்றை நடத்தியதாக கிளின்ரன் நிர்வாக வட்டாரங்கள் தெரிவித்ததாக 'வாஷிங்டன் டைம்ஸ்' நாளேடு தெரிவித்துள்ளது.

இந்த மையத்தில் ரஷ்யா அணு ஆயுதச் சோதனை நடத்தியதற்கான அறிகுறிகள் நொவயா ஸெம்லியா தீவுக்கு அருகில் இம்மாதம் 16 ஆம் திகதி தென்பட்டதாக வாஷிங்டன் தெரிவிக்கிறது.

சோவியத் யூனியன் உடைந்த போது மூடப்பட்ட இந்த சோதனை மையத்தை ரஷ்ய அதிபர் பொரிஸ் யெல்ட்சின் 1992 இல் மீண்டும் திறந்து வைத்தார்.

அந்த ஆண்டில் அணு ஆயுதச் சோதனையை நிறுத்தி வைப்பதாக ரஷ்யா அறிவித்தது.

இது குறித்து ரஷ்யாவிடம் அமெரிக்கா விளக்கம் கேட்டுள்ளது.

தங்களுக்குக் கிடைத்த தகவலின்படி ஆய்வு செய்ததில் இது தெரியவந்துள்ளது என்றும் —

எனினும் இது அணு ஆயுதச் சோதனையா அல்லது சாதாரண சோதனையா என்று தற்போது எதுவும் கூறமுடியாது என்றும் இராணுவ செய்தித் தொடர்பாளர் மைக்கேல் டபுள்டே தெரிவித்தார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஓய்வூதிய நலன்புரித் திட்டம்

# தவணைப் பணத்தைச் செலுத்த கமக்காரர்களுக்கு கால அவகாசம்

யாழ்ப்பாணம், செப். 10
கமக்காரர் ஒய்வூதிய சமூக பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தில் இணைந்து ஐந்து தவணைகள் தொடர்ந்து தவணைப்பணம் கட்டாமல் உறுப்புரிமையை இழந்தவர்களுக்கு சலுகை வழங்கப்பட்டுள்ளது.

இந்தத்தவணைப்பணத்தை கட்டி உறுப்புரிமையை புதுப்பித்துக் கொள்ள வழங்கப்பட்ட கால எல்லை கடந்த ஜூன் 30 ஆம் திகதி முடிவடைந்திருந்தது.

கமக்காரர்களின் நலன் கருதி இந்தக் கால எல்லை எதிர்வரும் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைநீடிக்கப் பட்டுள்ளதாக கமத்தொழில் காப்புறுதிச் சபை உதவிப் பணிப்பாளர் எஸ். சுந்தரசேரன் அறிவித்துள்ளார், (இ-3)

# கிராம சேவையாளர் பிரிவுகளில் விசேட அ.அட்டை விநியோகம்

யாழ். நகரப்பகுதியில் உள்ள 5 கிராமசேவையாளர் பிரிவுகளில் விசேட அடையாள அட்டைகள் நாளை முதல் 16 ஆம் திகதி வரை அந்த அந்தப் பிரிவு கிராம சேவையாளர் அலுவலகங்களில் வைத்து வழங்கப்படவிருக்கின்றன.

நாவாந்துறை தெற்கு (ஜே. 84) பிரிவில் நாளையும்—

சோனக தெரு வடக்கு (ஜே. 86) பிரிவில் நாளை மறுதினமும்—

வண்ணார்பண்ணை (ஜே. 82) நாவாந்துறை வடக்கு (ஜே. 85) ஆகிய பிரிவுகளில் எதிர்வரும் 13 ஆம்திகதியும்—

கோட்டை (ஜே. 81) பிரிவில் எதிர்வரும் 16 ஆம் திகதியும்— விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படவிருக்கின்றன. (இ-3)

## அந்தியேட்டி மடம் திருத்தப்படும்

நெடுந்தீவு செப். 10
வேலணை சாட்டி வெள்ளைக் கடற்கரைப் பகுதியில் சேதமுற்றுள்ள அந்தியேட்டி மடத்தைப் புனரமைக்கவும்—

மடத்துக்குச் சமீபமாகப் புதிய கிணறு ஒன்றைத் தோண்டவும்— வேலணை பிரதேசசபை 75 ஆயிரம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. (இ-111

## அமோனியம் சல்பேற் உரம் விநியோகம்

வலிகாமம் தெற்கு, செப்.10
விவசாயிகளுக்குத் தேவையான அமோனியம் சல்பேற் உரம் உடுவில் கமநல கேந்திர நிலையத்தில் தற்போது தாராளமாக விநியோகிக்கப் பட்டு வருகின்றது.

ஒரு விவசாயிக்கு ஓர் அந்தர் வரையிலான உரம் வழங்கப்படுகின்றது.

மேலதிகமாகத் தேவைப்படுவோர் தத்தமது பிரிவு விவசாய சம்மேளனத்தினரின் சிபார்சுடன் பெற்றுக் கொள்ளமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-152)

## 10 மணி பஸ் சேவை இன்னும் இல்லை

# படகுக்காக குறிகாட்டுவானில் நீண்டநேரம் காத்துநிற்கும்நிலை

நெடுந்தீவு, செப். 10
யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் இருந்து குறிகாட்டுவானுக்கான காலை 10 மணி பஸ் சேவைஇன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

இந்தச் சேவை தொடர்பாக நேர அட்டவணையிடப் பட்டுள்ள போதும் சேவை ஆரம்பிக்கப்படாததால் நெடுந்தீவுப் பயணிகள் பெரிதும் சிரமப்படுகின்றனர்.

காலை 7.15 மணிக்குப் புறப்படும் பஸ்ஸிலேயே நெடுந்தீவுப் பயணிகள் குறிகாட்டுவான் செல்ல வேண்டியுள்ளது.

இதனால் தமக்குத் தேவையான பொருள்களை யாழ். நகரில் வாங்கிச் செல்ல முடியாதிருப்பதாகவும் —

நண்பகல் 12 மணிக்குப் புறப்படும் படகுக்காக, குறிகாட்டுவான் துறைமுகத்தில் உணவு, குடி தண்ணீர் எதுவும் இன்றி குழந்தைகளுடன் நீண்டநேரம் தரித்து நிற்க வேண்டியுள்ளது எனவும் — நெடுந்தீவுப் பயணிகள் கூறுகின்றனர். (இ-111)

## நூலக வார விழா

யாழ்ப்பாணம், செப். 10
சன்மார்க்க வித்தியாலய நூலக வார விழா கடந்த 3ஆம் திகதி அதிபர் து. நடராஜலிங்கம் தலைமையில் பாடசாலையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் எம். எஸ். ஸ்ரீதயாளன் (சேவைக்கால ஆலோசகர் - தமிழ்) சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். கருத்தரங்கு, நூலகக் கண்காட்சி என இரு பிரிவுகளாக நிகழ்வுகள் இடம் பெற்றன. (இ)

# 58 பொலீஸார் மீது லஞ்ச விசாரணை!

கொழும்பு, செப். 10
லஞ்சம் வாங்கியமை உட்பட பல்வேறு குற்றங்களுக்காக பொலீஸ் அதிகாரிகள் 58 பேர் விசேட விசாரணைப் பிரிவினரால் (எஸ் .ஐ. யூ.) விசாரணைக்கு உட்படுத்தப் பட்டிருப்பதாக 'ராவய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இவர்களில் 5 சிரேஷ்ட பொலீஸ் சுப்பிரின்டன்களும், 15 பொலீஸ் சுப்பிரின்டன்களும், 7 உதவிப் பொலீஸ் சுப்பிரின்டன்களும், 8 சிரேஷ்ட பொலீஸ் பரிசோதகர்களும் அடங்குவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## மீளக்குடியமர்வு நிவாரணம்

யாழ்ப்பாணம், செப். 10
யாழ். பிரதேச செயலகத்தைச் சேர்ந்த சுமார் ஆயிரத்து 820 குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வு நிவாரணமான ரூபா ஐயாயிரம் வழங்கப்படவுள்ளதாக யாழ். பிரதேச செயலகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-5)

# கிராம அலுவலர் தத்தமது பிரிவில்வசிக்குமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், செப் 10
''கிராம சேவையாளர்கள் தமது கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட இடத்தினை வதிவிடமாகக் கொண்டிருக்க வேண்டும்.''

யாழ். நகர கொமாண்டர் பிரிகேடியர் மெண்டிஸ் மேற்கண்டவேண்டுகோளை விடுத்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலகங்களைச் சேர்ந்த கிராம சேவையாளர்கள் மற்றும் பிரதேச செயலர்களைச் சந்தித்து பிரிகேடியர் மெண்டிஸ் கலந்து உரையாடினார்.

அப்போதே பிரிகேடியர் மெண்டிஸ் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

கிராம சேவையாளர்களுடன் பொது மக்கள் அடிக்கடி தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை இருப்பதால் அவர்கள்தமது கிராமசேவையாளர் பிரிவுக்குட்பட்ட இடத்தில் வதியவேண்டியது அவசியமாகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

கிராம சேவையாளர்கள் சிலர் பாதுகாப்பு அரணுக்கு வெளியே இருப்பதால் அவசர தேவைகள் நிமித்தம் பொது மக்கள் கிராம சேவையாளர்களைச் சந்திக்க முடியாமல் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-5)

# கோட்ட மட்டத்திலான சித்திர சுவரொட்டிப் போட்டி

## சனிக்கிழமை நடத்துவதற்கு ஏற்பாடு

யுனெஸ்கோ ஈபிரி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களிடையே கோட்ட மட்டத்திலான சித்திர சுவரொட்டிப்போட்டிகள் இம்மாதம் 13 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

இப்போட்டிகள் பின்வரும் இடங்களில் நடைபெறும் என கல்வி வலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளர் எஸ். சிவராசா அறிவித்துள்ளார்.

★ வடமராட்சிக் கோட்டங்கள்
வேலாயுதம் ம. வித்தி., உடுப்பிட்டி அ. மி. கல்லூரி, நெல்லியடி ம. ம. வி.

★கோப்பாய் கோட்டம்
புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

★ சண்டிலிப்பாய் சங்கானை கோட்டங்கள்
மானிப்பாய் மகளிர் கல்லூரி, சங்கானை சிவப்பிரகாச ம. வி., விக்டோரியாக் கல்லூரி.

★உடுவில், தெல்லிப்பளைக் கோட்டங்கள்
இராமநாதன் கல்லூரி. (இ-152)

# சர்வதேச நல்லொழுக்க தினம்

வலிகாமம் தெற்கு, செப். 10
சித்தன்கேணியில் அமைந்துள்ள வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினரின் ஆதரவில் சர்வதேச நல்லொழுக்க தினம் ஒக்ரோபர் மூன்றாம் திகதி கொண்டாடப்பட உள்ளது.

இதனை முன்னிட்டு மேற்படி நிறுவகத்தின் மது போதைகள் தகவல் நிலையத்தினர் மது ஒழிப்பு, போதைப் பொருள் ஒழிப்பு, புகைப்பொருள் மறுப்பு பற்றிய பிரசார நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

சர்வதேச நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே கோட்ட ரீதியான கட்டுரைப் போட்டியை நடத்தவும் ஒழுங்குகள் செய்யப் பட்டுள்ளன.

சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில் கல்விக் கோட்ட பாடசாலை மாணவர்களிடையே இக்கட்டுரைப் போட்டிகள் இம்மாதம் 20 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற உள்ளன.

இப் போட்டிகளில் பங்குபற்றுபவர்களது பெயர்களை இம்மாதம் 17 ஆம் திகதிக்கு முன் கோட்டக்கல்வி பணிமனைகளில் சமர்ப்பிக்குமாறு அதன் செயலாளர் வீ. இரவீந்திரன் கேட்டுள்ளார்,

மேற்படி நிலையத்தினர் மதுப்பழக்கத்தில் இருந்து முற்றாக விடுபடுகின்றவர்களைப் பாராட்டியும், கௌரவித்தும் வருகின்றனர்.

கோட்டைக் காட்டுப் பகுதியில் ஒருவரும், உடுவில் மல்வம் பகுதியில் ஒருவரும் மேற்படி பிரசாரத்தின் பலனாக மதுப்பழக்கத்தைக் கைவிட்டுள்ளனர்.

இவர்களைப் பாராட்டியுள்ள நல்லொழுக்க சம்மேளனம் ஒக்ரோபர் மூன்றாம் திகதி இவர்களைக் கௌரவிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. (இ-152)

## பிக்-அப் வாகனம்

யாழ்ப்பாணம், செப். 10
யாழ்ப்பாணம், பிரதம தபாலக பிரதித் தபால்மா அதிபரின் பாவனைக்கு 'பிக்-அப்' வாகனம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

இந்த வாகனம் கடந்த இரண்டாம் திகதி கொழும்பில் இருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணம் கொண்டுவரப் பட்டது. (இ-15)

# கிருஷாந்தி குடும்பத்தின் ஞாபகமாக பெறுமதி மிக்க நூல்கள் அன்பளிப்பு

## யாழ். பொது நூல்நிலையத்துக்கு வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம், செப். 10
கடந்தவருடம் செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்ட கைதடி மாணவி கிருஷாந்தி, அவரது தாயார் இராசம்மா குமாரசாமி, சகோதரன் பிரணவன் ஆகியோரின் ஓராண்டு நினைவு நாளன்று விலை மதிப்புடைய கிடைத்தற்கரிய 500க்கும் மேற்பட்ட ஆங்கில இலக்கிய இலக்கண நூல்கள் அவரது சகோதரி பிரசாந்தி குமாரசாமியின் சார்பாக யாழ். நூலகத்துக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டன.

திருமதி இராசம்மா குமாரசாமியின் சகோதரியும், கைதடி விக்கினேஸ்வரக் கல்லூரி முன்னாள் அதிபருமாகிய திருமதி இராஜமணி தேவபாலசுந்தரம், யாழ். மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கத்திடம் நூல்களைக் கையளித்தார்.

இவ்வைபவம் இம்மாதம் ஏழாம் திகதி இடம்பெற்றது.

நூல்களைப் பெற்றுக் கொண்ட ஆணையாளர் அங்கு உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

திருமதி இராசம்மா ஒரு சிறந்த ஆங்கிலப்பட்டதாரி என அறிகிறேன். அவர் ஆசிரியர் சேவையில் இருந்து அதிபர் பதவி உயர்வு கிடைத்த போதும், பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக தொடர்ந்து உப அதிபராகப் பணியாற்றியுள்ளார். அவரின் பெறுமதி மிக்க நூல்களைப் பெறுவதில் சந்தோஷமடைகிறேன். இத்தகைய நூல்கள் எம்மவர் மத்தியில் இப்போது புழக்கத்தில் குறைவாகவே உள்ளன. ஆங்கிலம் பயிலும் மாணவருக்கு இவை பெரிதும் பயன்படும் — என்றார்.

இந்த ஆங்கிலப் புத்தகங்களை நூலகத்துக்கு வழங்க ஏற்பாடு செய்த யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தின் தலைவர் எஸ். பரமநாதனுக்கும் ஆணையாளர் தமது நன்றியைத் தெரிவித்தார்.

மாநகர திணைக்கள தலைவர்கள் பலர் இதில் கலந்து கொண்டனர்.

மாநகர சபை பிரதம நூலகர் [illegible] நன்றியுரை நிகழ்த்தினார். (அ-3)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## யா / மானிப்பாய் சென்ற். ஆன்ஸ் றோ. க. த. க. பாடசாலை

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் தேர்வு–1995
சித்தியடைந்தோர் விவரம்

செல்வி T. சுதர்சிகா - 133 புள்ளிகள்
" J. ஜீவிதா - 124 "
" P. நிஷானி - 109 "

மாணவர்களையும் இவர்களது வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த அதிபரையும், ஆசிரியர்களையும் பாராட்டி நன்றி கூறுகின்றோம்.

பெற்றோர், பழைய மாணவர்கள்.
பாடசாலை அபிவிருத்திச் சங்கம். [49563]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி
# நிறுவுநர் நினைவு மலர்

10 — 09 — 1997

## ஆதீன முதல்வரின் அருளாசி

யாழ்ப்பாணம் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியை நிறுவிய மழவராயர் கந்தையா அவர்களின் நினைவு நாளைக் கொண்டாடுவது மிகுந்த மகிழ்ச்சியைத் தரும் விடயமாகும்.

தர்மம் செய்வதையே தலையாய கடமையாகக் கொண்டு பல கைங்கரியங்களை மழவராயர் நிறைவேற்றியுள்ளார். கல்வியை வளர்ப்பதற்கு சோமஸ்கந்தக் கல்லூரியும் சமயத்தை வளர்ப்பதில் திருஞானசம்பந்தர் ஆதீனமும் அவர் ஆற்றிய பணிகளில் மிகச்சிறந்து விளங்குபவை.

தர்மம் தலைகாக்கும். தர்மப் பணிகளை இன்றைய சந்ததியினரும் செய்வது மழவராயர் கந்தையா அவர்களுக்குச் செய்யும் நன்றிக் கடனாகும். சோமஸ்கந்தக் கல்லூரியின் நிறுவுநருடைய நினைவு நாளைக் கொண்டாட முன்வந்த அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், மாணவர்கள் எல்லோரையும் இறைவன் ஆசீர்வதிக்கவும், நிகழ்ச்சிகள் சிறப்புற அமையவும் இறைவனை வேண்டுகின்றோம்.

ஸ்ரீலஸ்ரீ
சோமசுந்தர பரமாசாரிய ஸ்வாமிகள்
குருமஹாசந்நிதானம்.

## வரலாற்றில் சிறப்பிடம்

'பெருமைக்கும் ஏனைச்சிறுமைக்கும்தத்தம் கருமமே கட்டளைக் கல்''

வள்ளுவரின் இந்த வாக்கிற்கமைய புத்தூர் மழவராயர் கந்தையா அவர்களின் பெருமையை உலக மக்கள் அனைவரும் நன்கு அறிவர். தர்ம கைங்கரியங்ளில் ஈடுபட்டு வாழ்ந்த அமரர் ஆன்மீகப் பணி, அறிவுப்பணி, அறப்பணி என பலவேறு பணிகளைச் செய்த போதிலும் அவரது பெருமைக்கு மெருகூட்டுவது போல் அமைவது அவரால் அமைக்கப் பெற்ற புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்த கல்லூரி ஆகும்.

உலக நன்மையின் பொருட்டு ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்ற உயர்ந்த நோக்கோடு, உயர் பண்பாட்டு விழுமியங்களோடு, இலங்கை அரசு இலவசக் கல்வியை வழங்குவதற்கு பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னரே, இலவசக் கல்வியை வழங்கி கல்வி வரலாற்றிலும் சிறப்பிடம் பெறுகின்றார்.

இத்தகைய பரோபகார சிந்தையினரான அமரர் மழவராயர் கந்தையா அவர்களின் நினைவு நாள் கொண்டாடப்படுவதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

அமரர் நாமம் நிலைக்குக!
வாழ்க, வளர்க சோமஸ்கந்த கல்லூரி!

பேராசிரியர் திரு. வ. ஆறுமுகம்
கல்வியியற் றுறை, யாழ். பல்கலைக் கழகம்.

## மழவராயர் நாமம் நிலைக்குக

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியின் வரலாற்றினை அறிந்த எவரும், இக்கல்லூரியின் நிறுவுநர் அமரர் மழவராயர் கந்தையா அவர்களைத் தக்கார் எனப் பன்முறை போற்றுவர்.

மக்கள் சேவையே மகேசன் சேவை என மதித்து தனது ஏராளமான தேட்டத்தை தான் நிறுவிய கல்லூரிக்கென ஒதுக்கியவர்.

அன்னாரின் பெருமைகளையும், அவர் கல்வி மீதும், சோமஸ்கந்தக் கல்லூரியின் மீதும் வைத்திருந்த அபிமானத்தையும் நன்கு உணர்ந்த இளந்தலைமுறையினரான அதிபர், ஆசிரியர்களே இக் கல்லூரியை தற்பொழுது நிர்வகித்து வருகின்றனர். இவர்களின் அரும் பணியால் சோமஸ்கந்த கல்லூரியின் கல்விப் பெருமையும், பெரியார் மழவராயர் கந்தையா அவர்களின் நாமமும் என்றென்றும் நிலைத்திருக்குமென திடமாக நம்புவோம்.

ஆ, ராஜேந்திரன்,
கோட்டக் கல்வி அலுவலர், கோப்பாய்.



## மழவராயரின் பணிகள்

புத்தூர்ப் பதியில் தோன்றிய மழவராயர் கந்தையா அவர்கள் சொல்லால், செயலால், உள்ளத்தால் தூய்மை கொண்ட ஒரு பெரியார். இதனாலேயே இவருடைய வரலாறு இன்றுவரை நின்று நிலவுகிறது. இவர் தம் தேசத்தின் தேவையையும் நிலையையும் உணர்ந்து கொண்டு, ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்பதற்கு அமைய தமது பணிகளை ஆன்மீகத்துறையிலும் அறிவுத்துறையிலும் அறத்துறையிலும் செலவிட்டு மக்களின் செயற்கரிய செயல் வீரராகப் பேசப்படும் தகைமையைப் பெற்றார்.

புத்தூர்ப் பதியிலே காலத்தால் அழியாத புராதன அம்மன் — சிவன் கற்கோயிலை ஆக்குவதற்கு அத்திவாரமிட்ட அவரது ஆத்மீகப் பணியை இன்றும் ஈழமக்கள் நினைவு கூர்வர். மழவராயர் கந்தையா அவர்களின் அறிவுப் பணிக்கான அடிப்படையாக அமைவது புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி. ''கற்றாங்கு ஒழுக'' என்ற கல்லூரியின் தாரக மந்திரம் இன்றும் இவரின் பணியை நினைவுறுத்திக் கொண்டிருக்கின்றது. கற்றதனாலாய பயன் கடவுளை வழிபடல், ஆன்மவிடுதலை பெறல் என்பதற்கு இணங்க சமயக் கல்விக்கு முதலிடம் வழங்கினார்.

ஈதல் இசைபட வாழ்தல் என்கின்ற வள்ளுவத்தின் அடியை ஒற்றியது அமரர் கந்தையாவின் வாழ்க்கை நெறி.

ஆன்ம அறிவுப் பணிகளோடு மட்டும் நின்றுவிடாது மனிதனின் ஜீவாதார அடிப்படைகளான உண்டியையும் உறையுளையும் வழங்க வேண்டும் — என்ற உன்னத நோக்கோடு அன்னசத்திரம் ஒன்றைப் புத்தூரிலே அமைப்பித்தார்.

இத்தகைய செயற்கரிய செயல்களைச் செய்து உலகில் வான்புகழ் பெற்ற அமரர் மழவராயர் கந்தையா மறுமலர்ச்சிக்கு வித்திட்ட வள்ளல் என்று கூறினால் அது மிகையாகாது. அவரின் அரிய பெரிய சிறப்புக்கள் ஈழமெல்லாம் பரவி சிறப்புற எல்லாம் வல்ல இறைவனை நினைந்து பிரார்த்தித்து வாழ்த்துக் கூறி விடைபெறுகிறேன்.

சி. சிவராசா
கல்விப் பணிப்பாளர், யாழ். வலயம் II

இருபாலை,
கோப்பாய்.

## நிறுவுநர் நாள் நிகழ்வுகள்

நேரம்:- இன்று காலை 9.00 மணி
தலைவர்:- திரு. வ. ஆறுமுகம் அவர்கள் [அதிபர்]
ஆசியுரை:- சிவஸ்ரீ சாமி. சோமசுந்தரக்குருக்கள் [பிரதமகுரு, புத்தூர் சிவன்தேவஸ்தானம்]

பிரதம விருந்தினர்:
திரு. சி. சிவராசா அவர்கள்
[ கல்விப்பணிப்பாளர், யாழ். வலயம் II ]

சிறப்பு விருந்தினர்கள்:
திரு. க இராசதுரை அவர்கள்
[ நிர்வாக அதிகாரி, யாழ். செயலகம் ]
திரு. வி. இராசையா அவர்கள்
[ பிரதிக்கல்விப்பணிப்பாளர், யாழ், வலயம் II ]
திரு. ஆ. இராசேந்திரன் அவர்கள்
[ கோட்டக்கல்வி அதிகாரி, கோப்பாய். ]

## செய்நன்றிக் கடன்

''நயனொடு நன்றி புரிந்த பயனுடையார் பண்பு பாராட்டும் உலகு''

வள்ளுவரின் இந்த வாக்கிற்கு அமைவாக வள்ளல் மழவராயர் கந்தையா அவர்கள் இற்றைக்கு அறுபது ஆண்டுகளுக்கு முன்னரே உலக நன்மையின் பொருட்டு சிவன் தேவஸ்தானம், ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி, அன்னசத்திரம் என்பவற்றை அமைத்து வழங்கியதோடு மட்டுமன்றி, அவை தொடர்ந்தும் தடங்கலின்றி செயற்பட அறக்கட்டளையினையும் அமைத்தார்.

நமது நாட்டில் இலவசக் கல்வி வழங்குவதற்கு பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாகவே எமது கல்லூரியில் இலவசக் கல்வியினை வழங்கிய வள்ளல் மழவராயர் கந்தையா, கல்வி உலகிலேயே முக்கிய இடம் பெறுகின்றார்.

இப்பெருமகனார் ஆரம்பித்த சோமஸ்கந்த கல்லூரியினால் பயன் பெற்றவர்கள் பலர். எமது நாட்டில் மட்டுமன்றி, வெளிநாடுகளிலும் சிறந்த கல்விமான்களாகவும், பண்பாளர்களாகவும், சமூகத்தின் ஒளி விளக்குகளாகவும் அவர்கள் திகழ்கின்றார்கள் என்றால் அவரது சிந்தனையில் உதித்த பயனை முழுமையாக அனுபவித்தார்கள் என்றே நாம் கருதலாம்.

இந்நன்றிக் கடனானது இளம் தலைமுறையினரிடையே மேன்மேலும் வளர்ந்து வள்ளலார் புகழ் பாரினிலே மலர்ந்திட வேண்டும் என செப்ரெம்பர் பத்தாம் நாள் செய்நன்றியறிதலுடன் நினைவு கூரப்பட்டு பரிசளிப்பு விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

வாழ்க வள்ளலார் புகழ்!

வளர்க சோமஸ்கந்த கல்லூரி!

வ. ஆறுமுகம்,
அதிபர்.

ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி,
புத்தூர்.

## பழைய மாணவன் ஆசி

புத்தூர் வள்ளல் மழவராயர் கந்தையா அவர்களுக்கு ஒரு நினைவு மலர் வெளிவர இருப்பது மகிழ்ச்சியூட்டுவது மட்டுமல்ல, நன்றியுணர்வின் வெளிப்பாடுமாகும். அமரரின் அறப்பணிகள் அனேகம். அவற்றுள் புத்தூர்சிவாலயம், ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி, அன்னசத்திரம் என்பவற்றுள் நடுநாயகமாக விளங்குவது புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியே.

புத்தூரையும் அதனைச் சூழவுள்ள பல கிராமங்களையும் சேர்ந்த மக்கள் கடந்த ஆறு தசாப்தங்களுக்கு மேலாக தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான கல்வி, கலை, கலாசாரம் போன்றவற்வைப்பெற்று வாழ்வும், வளமும் அமைய உதவும் ஒரே நிறுவனமும் இதுவேயாகும்.

இக்கல்லூரிக் குடும்பத்தினர், நிறுவுநர் அவர்களின் வாழ்க்கை வரலாறு, அறப்பணிகள் என்பனவற்றைத் தற்காலச் சந்ததியாருக்கு நினைவூட்டும் வகையில் வெளியிடுவதும் ஒரு புனிதமான அறப்பணியேயாகும்.

இந்த மலர் எல்லோர் உள்ளங்களிலும் நீங்காத இடத்தைப் பிடிக்க வேண்டுமென இறையருளை வேண்டி, எனது ஆசியையும் தெரிவிக்கிறேன்.

எல்லோரும் வாழ்க! இன்பமே சூழ்க!

க. ச சோமசுந்தரம்
(ஆரம்பகால பழைய மாணவர், ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி.)
ஆவரங்கால்,
புத்தூர்.

[விளம்பர இல.சி/1518]

நிறுவுநர் இலட்சியமும் கல்லூரியும் சிறப்புற வாழ்த்துவோர்:
யாழ். பாட்டா
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

CITY TAILORS
73, POWER HOUSE ROAD,
JAFFNA.

ALDI
75, POWER HOUSE ROAD,
JAFFNA.

றெக்ஸ் தையல் அகம்
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மதுரா நகை மாடம்
59, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

அம்பிகா பாதஅணி
யாழ்ப்பாணம்.

பாத அணி திருத்துபவர்கள்
57, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ். வோச் வேக்ஸ்
55, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## வீடு விற்பனைக்கு

யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு முன்பாக 1½ பரப்பு காணியுடன், வீடு, வளவு (சகல வசதிகளையும் கொண்டது) உடனடி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ''அபிராமி விலாஸ்'' (யாழ். பல்கலைக்கழகம் முன்பாக) 212, சேர் பொன். இராமநாதன் வீதி, திருநெல்வேலி.
[49569]

## விற்பனைக்கு

3 வான்கோழிகள் விற்பனைக்கு உண்டு. 2 ஆண். 1 பெண். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: க. பரஞ்சோதி, நுணாவில் வீதி, (தம்பு லேன்) சாவகச்சேரி.
[49542]

வைரமான பனைமரங்கள், சலாகைகள் 6X3½ அடி சுற்றளவு கொண்ட மஞ்ச வண்ணா, வேம்பு, பூவரசம் பலகைகளும் விற்பனைக்கு உண்டு. மொத்தமாக எடுப்பவர்களுக்கு கழிவுண்டு. தொடர்பு; கதிரித்தம்பி, 16/5, சீனியர் லேன், வண்ணார் பண்ணை. இன்னும் பல பொருள்கள் விற்பனைக்குண்டு.
[49560]

கடைக்குத் தேவையான இரும்பு விறாக்கி. (20 அடி X 5 அடி) மற்றும் மரத் தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பழனிதுரை, இல. 101, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
[49561]

## தவறிவிட்டது

கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி சந்தை மரக்கறிப் பகுதியில் 1½ பவுண் சங்கிலி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி செல்வம் மரக்கறிக் கடையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [சி/1513]

## நாடகம்

07.09.97 தினக்குரலில் தமிழ்த்தினப்போட்டி சிறுகதை வாசித்தீர்களா? அந்தச் சிறுகதையை எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்கள் 1. நாடகம் எழுதுவது எப்படி? 50/- 2. அக்கரைச்சீமையில் நாவல் 25/-
[49535]

## பாலர் வகுப்பு

7 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கான ஆங்கிலம், தமிழ், கணிதம் (English Medium) ஆசிரியர் ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி, 402 (302) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
[49545]

## காணவில்லை

நல்லின, பிறவுண் நிற கன்னிப் பசு (சினைப்படுத்தப்பட்டது) 06-09-97 அன்று இரவு காணாமற் போயுள்ளது. இது பற்றிய தகவல் அறிந்தவர்கள் தயவு செய்து பே. கணேசலிங்கம், 233/5, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அறியத்தரவும், தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
[49564]

## கணிதம் O/L

Credit, Distinction பெறுபேறடைய ஆரம்பத்திலிருந்து வினா விடை வரையும் (ஆண்டு 9, 10) கற்பிக்கப்படும். அனுபவமுள்ள ஆசிரியர், 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி. திருநெல்வேலி,
[49566]

# பிற்போடப்பட்டுள்ளது

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் நலன் புரிச் சங்கத்தால் **10-09-97** அன்று அதிர்ஷ்டம் பார்க்கவிருந்த நிகழ்வு, தவிர்க்க முடியாத காரணத்தால் **10-10-97** க்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதை நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

**நலன்புரிச் சங்கம்,**
**சு. வை. அ. பணிமனை,**
**தெல்லிப்பழை.**

(49546)

# இலங்கை மின்சார சபை

## வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான
# கூறுவிலை கோரல்

இலங்கை மின்சார சபையின் ஆக்க வேலைப் பகுதி, யாழ். பிரதேச அலுவலகம் என்பனவற்றின் பாவனைக்காக டீசல் மூலம் இயங்கும் / சிறிய ட்ரக் வண்டி / லொறிகள் என்பன, ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்கு அமர்த்துவதற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

கீழ்க் குறிப்பிட்ட அலுவலகத்தில் மீளளிக்கப்படாத ஐம்பது ரூபாவுக்கு மட்டும் பொது முகாமையாளர், இலங்கை மின்சார சபை, கொழும்பு என்ற பெயரில் காசுக்கட்டளையை/ வங்கியாணையைப் பெற்று அதனைச் செலுத்திப் பெறப்பட்ட கூறுவிலை கோரல் படிவத்தினை நிரப்பி, எனது அலுவலகத்தில் 1997-09-19 ஆம் திகதி அன்றோ அதற்கு முன்போ கையளிக்கப்படல் வேண்டும்.

தேவைப்படும் வாகனங்களின் விவரம்:-

1. திறந்த லொறி 3 தொன்/5 தொன்
2. திறந்த சிறிய ரக ட்ரக் வண்டி 1 – 1½ தொன்

**பிரதிப் பொது முகாமையாளர்**
(வடமாகாணம்)

இலங்கை மின்சார சபை,
536/1, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. பே. எண்:- 2238 (யாழ்.)

இலங்கை மின்சார சபை சூழலைத் தக்கவைப்பதற்கும் அதன் அபிவிருத்திக்கும் தன்னை அர்ப்பணம் செய்கிறது.

(சி/1519)

# 31-ம் நாள் நினைவுத்துளிகள்



## அமரர் விசுவலிங்கம் மார்க்கண்டு

மலர்வு: **02-03-1921** உதிர்வு: **11-08-1997**

அன்பின் திருவுருவே! பாசத்தின் பிறப்பிடமே!
அருமையாய் எமை வளர்த்தெடுத்த ஐயாவே!
பெருமையாய் உமை நித்தமும் நாம்
விருப்புடன் வணங்கி வாழ்த்திடுவோம்.

எம் குடும்பத் தலைவரின் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

36/1, காட்டுக்[illegible]
யாழ்ப்பாணம்.
(49562)

# ★ அரியதோர் வாய்ப்பு ★

**30 - 09 - 1997 வரை**

கொழும்பு விலைக்கு ஆண்கள் சோலபுரி **259/90**
பாலிதா **149/90** பாட்டா பிளற்போம் **169/90** க்கும்
பாட்டா றபர் **40/- 44/- 47/- 52/-**
முள்ளு பாட்டா **70/-** DSI றபர் **55/-**
(மற்றைய பாதணிகள் சிறு இலாபத்துடன்)

# ★ பீயூட்டி சூ பலஸ் ★

(பூபாலசிங்கம் புத்தகசாலைக்கு அருகாமையில்)
**பஸ் நிலையம் - யாழ்ப்பாணம்**
(49568)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

**வடக்கு - கிழக்கு மாகாண**
**தமிழ்த் தினப் போட்டி - 1997**
**யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி**

மாணவிகள்

**செல்வி அனுராதா அம்பலவாணர்**
பிரிவு 4 கட்டுரை ஆக்கம், சுருக்கமெழுதுதலில்
இரண்டாம் இடத்தையும்,

**செல்வி தனுஜா தபேந்திரன்**
பிரிவு 2 பேச்சு நிகழ்ச்சியில்
மூன்றாம் இடத்தையும்

பெற்றமைக்காக அவர்களைப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.
அத்துடன் அவர்களை வழிகாட்டி ஊக்குவித்த
அதிபர், ஆசிரியர்களுக்கும் பாராட்டுக்கள்.

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.**
யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி,
கரவெட்டி.
(49548)

# யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரி
## அமரர் திருமிகு வி. சிவசுப்பிரமணியம்
# நினைவுப் பேருரை



## அமரர் திருமிகு வி. சிவசுப்பிரமணியம்

(B. A., BSc., PGT, J. P.)
(முன்னாள் அதிபர், யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

**காலம்:- 11 - 09 - 97 வியாழன்**
காலை - 9-00 மணி

**இடம்:- கல்லூரிப் பிரார்த்தனை மண்டபம்**

**தலைவர்:- திரு. க. சிவாஜி**
அவர்கள்
(அதிபர், யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

தொடக்கவுரை:– திரு. அ. தர்ப்பரானந்தன் அவர்கள்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், உடுவில் கோட்டம்)

நினைவுப் பேருரை:- ''கணிதம் கற்றல் கற்பித்தலில் சில உதவிகள்''

வழங்குபவர்:- கலாநிதி திரு. சிவ-ஸ்ரீசற்குணராசா அவர்கள்
(சிரேஷ்ட விரிவுரையாளர், கணிதம் புள்ளிவிவரவியல், யாழ். பல்கலைக்கழகம்)

நிறைவுரை:- திரு. ஆறு- திருமுருகன்
(ஆசிரியர் - ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு
வேண்டுகின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள்,**
**மாணவர்கள்.**

யா. ஸ்கந்தவரோதயக்கல்லூரி,
கந்தரோடை,
சுன்னாகம்.
(சி-1525)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மாற்றும் மாறா 'மரபு'!

இப்போது நடைமுறையில் உள்ள மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர்கள் முறையை நீக்குவதற்கு முடிவாகியுள்ளது. நீண்ட காலமாக முன்னர் நடைமுறையில் இருந்த அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர்கள் முறையை மீண்டும் அமுல் செய்யப் போவதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ரத்தினசிறி விக்கிரமநாயக்கா கூறியுள்ளார்.

நிர்வாகத்தை அடிமட்டத்துக்கும் பரவலாக்கும் வகையிலேயே பிரதேச செயலாளர் பிரிவுகள், பிரதேச சபைகள், பிரமோதய சபைகள் முறை கொண்டு வரப்படுவதாக அதனை அறிமுகம் செய்த மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸஅப்போது கூறியிருந்தார்.

வடக்கில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் எதுவுமே நடைபெறாததால் பிரதேச சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அதிகாரிகளினால் நிர்வகிக்கப்படும் அமைப்புகளாகவே நீண்ட காலமாகத் தொடர்ந்து இயங்குகின்றன. அதனால் பிரதேச சபை முறையின் அரசியல் — நிர்வாகக் கட்டமைப்பு எத்தகைய பலனைத் தந்தது என்ற அனுபவம் வடபகுதி மக்களுக்குச் சிறிதும் இல்லை.

பிரதேச சபைகள் பிரதேச செயலகங்களின் அரசியல்—நிர்வாகக் கட்டமைப்புத் தெற்கிலேனும் வெற்றி பெற்றதா அல்லது தோல்விதானா என்பதற்கான ஆராய்ச்சி பூர்வமான—ஆதார பூர்வமான — ஊர்ஜிதமான தரவுகள் எதுவும் இல்லை.

அரசாங்கத்தின் இப்போதைய முடிவு, பிரேமதாச அறிமுகப்படுத்திய திட்டத்தை ஒழிப்பதே ஆகும். பதவிக்கு வரும் அரசுகள் தமக்கு முன்னர் ஆட்சியிலிருந்த அரசுகள் அறிமுகப்படுத்திய திட்டங்களை மாற்றி அல்லது ஒழித்துப் புதிய திட்டங்களை அமுல் செய்வது என்பது இந்த நாட்டு அரசியலில் பெரும் சாபக்கேடாகி விட்டது.

முந்திய அரசின் திட்டம் மக்களுக்கு நன்மை தருகிறதா என்பது குறித்து எதுவும் ஆராயாமல், புதிதாக ஆட்சிக்கு வந்ததும் தமது விருப்பு வெறுப்புக்கு ஏற்பப் புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தி மக்களைத் திண்டாடச் செய்வது இலங்கை ஆட்சியியலில் ஒரு மாறா ''மரபு'' ஆகிவிட்டது!

ஆட்சிக்குப் புதிதாக வருபவர்கள், பெரிதாகக் காட்டிக் கொண்டு, புரட்சிகரமான — நவீனமயமான — திட்டங்களை அறிமுகப்படுத்துவதாகக் கூறி தமக்குப் பிடித்த முறைகளைப் புகுத்த —

அடுத்து ஆட்சிக்கு வருவோர் அதனைத் தூக்கி எறிந்துவிட்டு வேறு புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்த—

அடிக்கடி திட்டங்களும் நடைமுறைகளும் மாறி மக்களின் கஷ்டங்கள் தீர்வதற்குப் பதிலாக மேலும் புதிய பிரச்சினைகள் உருவாக —

எதுவுமே உருப்படியாக இன்றி மக்கள் நலன் பாதிக்கப்படுவது — இந்த நாட்டின் துக்ககரமான நிலையாகும்.

நிர்வாகம், கல்வி, தொழில்துறை என்று சகல துறைகளிலும் அடிக்கடி மாற்றங்கள் செய்யப்படுவதால் —

நிரந்தரம் என்று எதுவுமே இல்லாமல், சிறுபிள்ளை மணலில் அழித்து அழித்து எழுதி விளையாடுவது போல, திட்டங்கள் அழித்து அழித்தெழுதப்படுவதால் —

இந்த நாடு முன்னேறுவதற்குப் பதிலாக பின்னோக்கிச் செல்கிறது.

# நகர வீதிகளைப் புனரமைக்கும் வேலைகள் தார் இன்றிப் பாதிப்பு

யாழ்ப்பாணம், செப். 10

போதியளவு தார் இல்லாத காரணத்தினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் உள்ள வீதிகளின் புனரமைப்பு வேலைகள் பாதிப்படைந்துள்ளதாக அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். நகர் வீதிகளில்'ஸி', 'டி' மற்றும் 'ஈ' வகுப்பு வீதிகளின் புனரமைப்பு வேலைகள் யாவும் யாழ். வீதி, அபிவிருத்தி அதிகாரசபையினாலேயே மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்—

இந்த வருடம் 'ஸி' வகுப்பைச் சேர்ந்த 388 கிலோமீற்றர் நீள வீதியும், 'டி' வகுப்பைச் சேர்ந்த 151 கிலோமீற்றர் வீதியுமாக 540 கிலோ மீற்றர் நீள வீதிகள் புனரமைக்கப்பட இருந்த போதிலும் போதியளவு தார் இல்லாததால் சுமார் 180 கிலோமீற்றர் நீள வீதியை மட்டுமே புனரமைக்கமுடிந்ததாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ். பிராந்திய பதில் பிரதம பொறியியலாளர் ஜி. இராமச்சந்திரன் தெரிவித்தார்.

இதேவேளை வீதி புனரமைப்பு வேலைகளுக்கு 3 ''ரோலர்கள்'' தேவையாக இருந்தும் தற்போது யாழ். வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் ஒரேயொரு ''ரோலர்'' மட்டுமே உள்ளது.

இதுவரை காலமும் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான தார் கப்பல் மூலமே யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டது. தற்போது கப்பல் சேவைகள் பாதிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (அ-5-9)

## சிறுமியின் கால் துண்டிப்பு

யாழ்ப்பாணம், செப். 10

நீர் வற்றிய கிணற்றில் தவறி விழுந்த 5 வயதுச் சிறுமி படுகாயமடைந்து இடது முழங்காலுக்குக் கீழ் துண்டிக்கப்பட்டார்.

துன்னாலை தெற்கு வேம்படிப்பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சிவராசசிங்கம் சலஞ்சா (வயது 5) என்ற சிறுமியின் காலே துண்டிக்கப்பட்டது.

கடந்த ஒரு மாதத்துக்கு முன் கிணற்றில் தவறி விழுந்த காலில் படுகாயமடைந்த சிறுமி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்குட்படுத்தப்பட்டிருந்தார்.

கால் பொருந்தக் கூடும் என்ற நிலையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

ஒரு மாதமாக மேற்கொள்ளப்பட்ட அச்சிகிச்சை பலனளிக்காது போகவே கடந்த வாரம் சத்திரசிகிச்சையின் மூலம் கால் துண்டிக்கப்பட்டது. (அ-15)

## கப்பல் சேவை

யாழ்ப்பாணம், செப். 10

காங்கேசன்துறையில் இருந்து மன்னாருக்கான கப்பல் சேவை நாளை நடைபெற இருப்பதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது.

கப்பலில் செல்ல சிவில் நிர்வாக அலுவலகத்தில் பெயர் பதிவுசெய்து கொண்டவர்களை நாளை காலை 8.00 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-5)

## புதிய முகாமையாளர்

யாழ்ப்பாணம், செப். 10

யாழ். ஹட்டன் நஷனல் வங்கியின் புதிய முகாமையாளராக அன்ரன் எட்வேர்ட் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

இதுவரை முகாமையாளராக கடமையாற்றிய எஸ். சோதிலிங்கம் பதவி உயர்வுடன் திருகோணமலைக்கு இடம் மாற்றம் பெற்றுள்ளார். (ஐ)

## மோசமான வீதி

நவாலி. செப். 10

யாழ். கல்லுண்டாய் வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் இருப்பதனால் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருந்து வருகிறது. (இ-100)

## 47ஏ, 47பி புள்ளிக்குரிய உலர் உணவு

யாழ்ப்பாணம், செப். 10

1997 ஒகஸ்ட் மாதத்துக்குரிய 47ஏ, 47பி புள்ளிகளுக்குரிய இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான இலவச உலர் உணவு விநியோகத்திற்கு மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலர்களுக்கும் பொருள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ப. நோ. கூ. சங்கங்களுக்கு வழங்கற் கட்டளையைப் பிறப்பித்து குறித்த விநியோகத்தை இம் மாதம் 22 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யுமாறு அனைத்து பிரதேச செயலர்களையும் யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் கேட்டுக் கொண்டுள்ளார். (இ)

## பளைப் பகுதியில் நிலக்கடலை உற்பத்தி

தென்மராட்சி. செப் 10

கெயர் நிறுவனமும் கமநல சேவைகள் திணைக்களமும் இணைந்து பளைப் பகுதியில் நிலக்கடலை உற்பத்தியை ஊக்குவிக்க உள்ளன.

மாரி காலம் அண்மிப்பதால் இப் பகுதியில் நிலக்கடலை பயிரிடக்கூடிய 25ஏக்கர் காணி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

நிலக்கடலை பயிரிடும் பயிரிகள் 100 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு பரீட்சார்த்தமாக தலா கால் ஏக்கர் வீதம் நிலக்கடலை பயிரிடப்படுமென தெரிவிக்கப்பட்டது.

## குணதிர யாழ். நகரில்!

யாழ்ப்பாணம், செப். 10

அத்தியாவசிய சேவைகள் நாயகமும், வடமாகாண மீள்குடியமர்வு, புனரமைப்பு அதிகாரசபைத் தலைவருமான சோமபால குணதிர நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

யாழ். செயலகத்தில் திணைக்களத் தலைவர்களுக்கு இன்று நடக்கும் கூட்டத்தில் அவர் பங்குபற்றுவார்.

குடாநாட்டில் உள்ள அரச திணைக்களங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் அவர் பலதரப்பட்ட பேச்சுக்களை நடத்துவார்.

எதிர்வரும் சனிக்கிழமை வரை அவர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பார். (உ-3-9)

## செல்வச்சந்நிதி வரை பஸ் சேவை

திருநெல்வேலி, செப். 10

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ். மத்திய பஸ் நிலையத்திலிருந்து அச்சுவேலிக்கு செல்லும் பஸ்களின் சேவை செல்வச் சந்நிதி ஆலயம் வரை விஸ்தரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பருத்தித்துறை வடபிராந்திய போக்குவரத்துச் சபை டிப்போவினால் நடத்தப்படும் யாழ்ப்பாணத்துக்கான பஸ் சேவைகளும் சந்நிதி ஆலயத்துக்கு ஊடாகச் சேவையாற்றி வருகின்றன. (இ-135)

## மிதிவெடியில் கால்இழப்பு

யாழ்ப்பாணம், செப். 10

மீசாலைக்குடியேறி, ஒருவருடத்துக்கு மேலாக நடமாடி வந்த வளவில், கிணற்றுத் தொட்டியருகில் இருந்த மிதிவெடியில் சிக்குண்டு இளம் பெண் ஒருவர் வலது கால் முழங்காலுக்குக்கீழ் துண்டிக்கப்பட்டு படுகாயமடைந்தார்.

நீர்வேலி வடக்கில் நேற்றுக் காலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் அப்புக்குட்டி விஜயலட்சுமி (வயது 22) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-5)

## வீதி ஒழுங்குகள்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் வேம்படிச் சந்தியில் இருந்து கொட்டடி சத்திரச் சந்திவரை விபத்துக்களைத் தடுக்கும் வகையில் வீதி ஒழுங்கு நடைமுறைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ் வீதியின் முக்கிய இடங்களில் வாகனங்கள் நிறுத்தக் கூடாத பகுதிகளில் நிறுத்தக் கூடாதெனக் குறிப்பிடும் அறிவுறுத்தல் பலகைகள் நடப்பட்டுள்ளன.

பாதசாரிகள் வீதியைக் கடக்கும் இடங்கள் குறித்தும் அடையாளமிடப்பட்டுள்ளது.

பொலிஸாரின் ஏற்பாட்டில் யாழ். மாநகரசபையினரால் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (இ-15)

# பத்திரிகையின் ஊடாகத் தமிழின் வளர்ச்சிக்கு உழைத்த ராஜகோபால்

## நினைவுக் கூட்டத்தில் அஞ்சலி உரை

ஈழத்தின் தலைசிறந்த பத்திரிகையாளர்களில் ஒருவராக விளங்கிய அமரர் பொன். ராஜகோபால் தமிழின் வளர்ச்சிக்கும், தமிழ்ப் பத்திரிகைத் துறையின் வளர்ச்சிக்கும் பெருமளவில் பங்களிப்புச் செய்துள்ளார்.

அதனால் அவர் யாழ்ப்பாணத்துக்கும் குறிப்பாக தனது பிறந்த ஊரான வட்டுக் கோட்டைக்கும் பெருமை தேடித் தந்தார்.

இவ்வாறு தெரிவித்தார் எழுத்தாளரும் பத்திரிகையாளருமான ''புத்தொளி'' ந. சிவபாதம்.

முதுபெரும் பத்திரிகையாளர் தமிழ்மணி பொன். ராஜகோபாலின் நினைவாக, வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் அண்மையில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. இந் நிகழ்விற்கு உதயன் - சஞ்சீவி பிரதம ஆசிரியர் ம.வ கானமயில்நாதன் தலைமை வகித்தார்.

அமரரின் திருவுருவப் படத்தை 'புத்தொளி திறந்து வைத்தார். அவர் அங்கு பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது :-

அமரர் ராஜகோபால் .... வருடங்கள் வீரகேசரி .... வெளியீட்டின் ஆசிரியராகத் தொடர்ந்து பணி புரிந்து ஒரு சாதனையையே நிலைநாட்டியுள்ளார்.

எழுத்தாளர்களை அன்புடன் அரவணைக்கும் பண்பு அவரிடம் நிறைந்து காணப்பட்டது. ஈழத்துத் தமிழ் வார சஞ்சிகைத் துறையில் அவர் புதிய அணுகு முறைகளைக் கையாண்டு பல புதுமைகளைச் செய்தார். அவர் பல புதிய எழுத்தாளர்களையும் உருவாக்கினார்.

அவர் ஒரு சிறந்த பத்திரிகையாளனாக மட்டுமன்றி அன்பும் பண்பும் நிறைந்த மானிடனாகவும் விளங்கினார். எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்களும் அவருக்கு நன்றியும் அஞ்சலியும் செலுத்தக் கடமைப்பட்டவர்கள் — என்றார்.

'ஈழநாடு' பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் எஸ். பெருமாள் பேசுகையில் —

பொன். ராஜகோபால் வீரகேசரி வார சஞ்சிகையைப் பொறுப்பேற்றதிலிருந்து அது முன்னரிலும் பார்க்க சிறப்புடன் வெளிவந்தது. ஒரு பத்திரிகையாளனுக்கு அவனது சொந்த ஊரில் நினைவு .... பத்திரிகையாளர்களும் மக்கள் சேவையாளர்களே. அவர்களை மறந்து விடக்கூடாது; மதிக்க வேண்டும் — என்றார்.

தமிழ்மணி ராஜகோபாலின் பணிகளை ஆராய்ந்தால், காலம் போகப் போகத் தான் அவற்றின் பாரிய தன்மையும், திறமையும், சிறப்பும் மேலும் துலாம்பரமாகத் தெரியவரும். சமூக நோக்குடைய ஒரு பத்திரிகையாளனாக விளங்கியதாலேயே அவரால் பெரும் பொறுப்புகளை நிறைவேற்றி, சாதனைகளைப் படைக்க முடிந்தது என்று பத்திரிகையாளர் வீ. சின்னத்தம்பி தமது பேச்சில் தெரிவித்தார்.

பிரசங்க பூஷணம் நா. சிவசண்முகமூர்த்தி, சட்டத்தரணி மு. கதிர்காமநாதன், இளைப்பாறிய அதிபர் அ. முருகவேள், அதிபர் சி. குணவீரசிங்கி, முன்னாள் பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் அ. அரியரத்தினம் உட்பட மற்றும் பலரும் பேசினர்.

பலரும் அனுப்பிய இரங்கலுரைகளும், கவிதாஞ்சலியும் நிகழ்வில் வாசிக்கப்பட்டன.

பண்டிதர் ம. ந. கடம்பேஸ்வரன் நன்றியுரை நிகழ்த்தினார். (அ)

## நாளை

**ஆவணி 26**

வியாழக்கிழமை

**திதி:** நவமி

பிற்பகல் 1.11 வரை.

**நட்சத்திரம்:** மூலம்

பிற்பகல் 2.52 வரை.

ஆவணி மூல நன்னாள்

சுபநேரம்: 7.33- 9.03

ராகுகாலம்: 1.33-3.03

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

## தையல் பயிற்சிக் கண்காட்சி

யாழ்ப்பாணம், செப். 10

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினரால் நடத்தப்பட்ட ஐந்து மாதகால தையற்பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்த மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட கண்காட்சி ஒன்று இன்று காலை 9.00 மணிக்கு கொட்டடி இளந்தளிர் இளைஞர் கழக மண்டபத்தில் நடைபெறும்.

பிற்பகல் 3.00 மணிக்கு பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இந்நிகழ்வில் யாழ். பிரதேச செயலரும், யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபருமான து. வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகவும், மாவட்ட இளைஞர் சேவை உத்தியோகத்தர் ரி. சிவதட்சணாமூர்த்தி சிறப்பு விருந்திராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

## விபத்தில் சிறுவன் காயம்

யாழ்ப்பாணம், செப். 10

ஓடிக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிளில் இருந்து தவறிவிழுந்து இரண்டரை வயதுச் சிறுவன் காயமடைந்தான்.

உரும்பிராயில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஸ்ரீ விஜயராசா பிரதீப்ராஜ் (வயது இரண்டரை) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-15)

## இராஜினாமா!

சென்னை, செப். 10

தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜி. கே. மூப்பனாரும், அமைச்சர் ஜெயந்தி நடராசன் மற்றும் அல்போன்ஸ் ஆகியோரும் தமது இராஜ்ய சபை உறுப்பினர் பதவிகளை ராஜினாமாச் செய்தனர்.

இது தொடர்பான 'பக்ஸ்' செய்தியை உப ஜனாதிபதி ஸ்ரீகாந்த்துக்கு மூப்பனார் நேற்று அனுப்பிவைத்தார்.

(முன்னர் வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்) (உ-3)

# யாழ். - விவசாய உற்பத்திகள் கட்டணமின்றி கொழும்புக்கு!

## உயர் மட்டத்தில் திட்டம் ஆராய்வு

யாழ்ப்பாணம், செப். 10

யாழ். மாவட்ட விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களை கட்டணம் ஏதுமின்றி மன்னார் ஊடாகக் கொழும்புக்கு எடுத்துச் செல்வது குறித்து ஆராயப்பட்டு வருவதாக யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் தெரிவித்தார்.

தற்சமயம் காங்கேசன் துறைக்கும் - மன்னாருக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் ''தராகி'' கப்பல்மூலம் யாழ்ப்பாண விவசாயிகளின் மரக்கறி மற்றும் வாழைக்குலை போன்ற உற்பத்திப் பொருள்களை மன்னாருக்கு எடுத்துச் செல்வது என்றும்-

அங்கிருந்து லொறிகள் மூலம்கொழும்புக்கு அவற்றை அனுப்பி வைப்பது என்றும்-

முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த முடிவு தொடர்பாக அரச மட்டத்தில் ஆராயப்பட்டு வருவதாகவும்-

இலவசமாக விவசாயிகளுக்கு இச்சேவையை வழங்குவது குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது என்றும்-

அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (உ-3)

# கொழும்புத் துறைமுக ஊழியர் இருவர் கைது!

## புலிகள் உறுப்பினர்களாம்

கொழும்பு, செப். 10

போலி அத்தாட்சிப் பத்திரங்களைச் சமர்பித்து கொழும்பு துறைமுகத்தில் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களாகப் பணியாற்றியதாக கூறப்படும் — விடுதலைப் புலிகள் இருவர் இரகசியப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக ''லங்காதீப'' சிங்களப் பத்திரிகை நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

மட்டக்களப்பைச் சேர்ந்த இந்த இரு இளைஞர்களும் போலியான சான்றிதழ்களைச் சமர்பித்து கொழும்பு துறைமுகத்தில் பணியாற்றி உள்ளனர் என்றும் —

இவர்கள் விடுதலைப் புலிகளினால் பயிற்றப்பட்ட முக்கிய உறுப்பினர்கள் என்றும்-

விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக உயர் பொலீஸ் அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி அப்பத்திரிகை தெரிவித்தது. (உ-3)

# வவுனியாவில் நாளை பாரதியார் நினைவு விழா

வவுனியா, செப். 10

வவுனியா வள்ளுவர் கலை, இலக்கிய கழகத்தின் 4 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், பாரதியார் நினைவு நாளும் நாளை பிற்பகல் 2 மணிக்கு வவுனியா நகரசபை உள்ளக மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

வவுனியா நகரசபை உறுப்பினர் செ. கிருபைராஜா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வவுனியா நகர சபைத் தலைவர் எஸ். லிங்கநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

முதுபெரும் பெரியார்களின் திருவுருவப்படங்களுக்கு மாலை அணிவித்தல், சொற்பொழிவு, பட்டிமண்டபம், கவியரங்கம் கலை நிகழ்ச்சிகள் ஆகியன அங்கு இடம்பெறும்.

தமிழ்மொழித்திறன் போட்டிகளில் மாகாண, தேசிய மட்டங்களில் பரிசுபெற்ற வவுனியாப்பகுதி மாணவர்களுக்கு சான்றிதழ், பரிசுகள் என்பனவும் வழங்கப்படும். (உ-164-3)

## சுட்டுக்கொலை

மட்டக்களப்பு அக்கரைப்பற்று பகுதியில் நேற்று முன்தினம் விசேட அதிரடிப்படையினர் விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவரை சுட்டுக் கொன்றதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-21-3)

## வல்லையில் விபத்து

வல்லையில் நேற்றுக்காலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள், சைக்கிள் விபத்தில் ஒருவர் காயமடைந்தார்.

மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த அல்வாய் கிழக்கைச் சேர்ந்த—சின்னத்தம்பி பிரபாகரன் (வயது 41) என்பவரே காயமடைந்தவராவார். காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-15)

## டாக்டர் வருகை

யாழ்ப்பாணம், செப். 10

கொழும்பில் இருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு வந்துள்ள சத்திர சிகிச்சை நிபுணர் அம்பலவாணர் தயாளன் நாளை முதல் தமது கடமையைப் பொறுப்பேற்று செயல்படவுள்ளார்.

விமானம் மூலம் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்த இவர், நேற்றே யாழ் போதனா வைத்தியசாலைக்குச் சென்று சத்திர சிகிச்சைப் பிரிவின் செயற்பாடுகள் பற்றி பார்வையிட்டுச் சென்றார். (உ-15)

## சீனச்...

(முதலாம் பக்கத் தொடர்)

இன்னுமொரு படகு தப்பிச் சென்றுவிட்டது என்றும்-

நடவடிக்கைத் தலைமையகம் மேலும் தெரிவித்தது.

தாக்குதலுக்கு உள்ளான கப்பல் பெரும் சேதமடைந்துள்ளது. அதில் பற்றிய தீயை அணைப்பதில் கடற்படையினர் நேற்று ஈடுபட்டிருந்தனர்.

ஜுலை மாதத்துக்குப் பின்னர் வடக்கு — கிழக்கு கடற்பகுதியில் தாக்குதலுக்கு உள்ளான மூன்றாவது கப்பல் இதுவாகும்.

யாழ். — மன்னார் பயணிகள் சேவையில் ஈடுபட்டிருந்த 'மிஷன்' போக்குவரத்துக் கப்பல் ஜுலை ஆரம்பத்தில் எரிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்துக்குப் பொருள்களை எடுத்துச் சென்று இறக்கிவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த கொரியக் கப்பல் ஜுலை 17 ஆம் திகதி கிழக்குக் கடலில் வைத்து மறிக்கப்பட்டு புலிகளால் கொண்டு செல்லப்பட்டது. (உ-3-9-21-164)


**யாழ்ப்பாணம் வணிகர் கழகம்**

**பொருள்கள், வாகனங்கள் கொழும்பிலிருந்து கொண்டுவருவதற்கான விண்ணப்பங்கள் கோரல்**

கொழும்பிலிருந்து கப்பல் மூலம் பொருள்களையும், லொறி, பஸ்வண்டி, வான், மினிபஸ், உழவு இயந்திரம் ஆகியவற்றையும் கொண்டுவர விரும்பும் வர்த்தகர்கள் யாவரும் யாழ்ப்பாணம் வணிகர் கழக அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு, அதற்கான பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறுவதற்கான விண்ணப்பங்களை 1997-09-12 வெள்ளிக்கிழமை பகல் 12-00 மணிக்கு முன் எமது அலுவலகத்தில் கையளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**யாழ்ப்பாணம் வணிகர் கழகம்**
இல 19 நவீன சந்தை,
(மேல்மாடி)
யாழ்ப்பாணம்.
(C/1527)

**D. M. I.**
233, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
**கலை, வர்த்தகப் பிரிவுகள்**
**A/L 99, 98 DAY CLASS**
ஆரம்பம்: 14—09—1997 (ஞாயிறு) காலை 8 மணி

| | |
|---|---|
| கணக்கீடு | — D. Sam |
| வணிகக்கல்வி | — B. பசில் |
| வ. புள்ளி விவரவியல் | — T. தவசேகர் |
| பொருளியல் | — R. இராஜேஸ்வரன் |
| அளவையியல் | — T. மோகன் |
| தமிழ் | — A. மீரா |
| இந்து நாகரிகம் | — S. சிவானந்தன் |
| இந்து சமயம் | — S. பிரதீஸ் |
| அரசியல் | — S. பஞ்சாட்சரம் |
| புவியியல் | — M. இக்னேசியஸ் |
| கிறிஸ்தவம் | — A. மல்லிகா |
| நாடகமும் அரங்கியலும் | — M. சந்திரன் |

★ அனுமதிகளை முன்கூட்டியே பெறவும்.
★ முழுப்பாடத்திட்டமும் முடிக்கப்படும்.
★ அலகு ஒன்றிலிருந்து ஆரம்பமாகும்.
(சி/1526) **D. Sam**

**A/L DAY CLASS**
ECON: Mr. இராஜேஸ்வரன்
COM. Mr. பசில்
STATS. Mr. தவசேகர்
ACC. Mr. பாலா
(கிரயக் க/கு)
★ கலைப்பிரிவும் ஆரம்பமாகின்றது.
**SHAMROCK**
(49559)

**எமது புதிய வெளியீடுகள்!**
மணிரத்தினத்தின் விஜய், சிம்ரன் நடித்த
★ நேருக்கு நேர்
ராம்கி, குஷ்பு நடித்த
★ கல்யாண வைபோகம்
பாண்டியராஜன், சங்கீதா நடித்த
★ அட்ரா சக்கை அட்ராசக்கை
என்றும் தரமான வீடியோ, ஓடியோ பதிவுகளுக்கு
**சுப்பஸோ வீடியோ**
யாழ்ப்பாணம். [சி/1528]

**புள்ளியிடற் திட்ட வகுப்பு**
பொருளியல்
**97 A/L**
by:
**திரு. சண்**
காலம்:- 11 - 09 - 97
நேரம்:- 11.30 a.m.
**நிருகல்விநிலையம்**
(கோண்டாவில்)
Note:-
பரீட்சை எடுத்த இவைகள் ... அனுமதிக்கப்படுவர்.
(47419)


## மரண அறிவித்தல்

### திருமதி குணமணி கனகரத்தினம்

யாழ்ப்பாணம் 417, நாவலர் வீதியைச் சேர்ந்த திருமதி குணமணி கனகரத்தினம் அவர்கள் 09-09-97 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு காலமானார்.

அன்னார் திரு. செல்லையா கனகரத்தினம் (இலங்கை வங்கி 2 ஆம் கிளை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராமலிங்கம் சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற செல்லையா-மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும், சோதிமணி, நல்லைநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெகதீஸ்வரி, காயத்திரி ஆகியோரின் அன்புத் தாயாரும், பா. கிருபாகரன் (ஆசிரியர், சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலை) அன்பு மாமியாரும், திரு. வை. பாலசிங்கம் (புங்குடுதீவு), திருமதி நித்தியலெட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று 10-09-97 புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மாலை 2-00 மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. கனகரத்தினம்
(கணவர்)

417, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(49571)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10-09-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org